வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது வாக்கெடுப்பு முடிவுற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அடுத்து, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கு மசோதாவை பேரவைக்குக் கொண்டுவர மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகின்றன.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(iii) தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967) (ஆய்வுக்குழு திருத்தி அமைந்தவாறு).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill[a] 1967 (Legislative Assembly Bill No. 18 of 1967) as amended by the Select Committee be taken into consideration'.

As the House is aware, this Bill was introduced in the House on 15th July 1967 and was subsequently referred to a Select Committee of the House for detailed scrutiny. On the invitation

---

Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 14th Feb. 1968.